//

DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case No. CC.No.255/2023**

**prosecution witness: PW-3**

| | | |
|---|---|---|
| Name | : | Caste |
| Fathers Name | : | calling |
| Village | : | Religion |
| Taluk | : | Age |

**Accused absent. Petition filed and allowed.**

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | முருகபூபதி | ஜாதி | : |
| க/பெ. | : | | தொழில் | : |
| கிராமம் | : | | சமயம் | : |
| தாலுகா | : | | வயது | : |

<u>19.03.2025</u>

<u>முதல் விசாரணை :-</u>

நான் மண்டபம் சேதுநகரில் குடியிருந்து வருகிறேன். கடல் தொழில் செய்து வருகிறேன். கடந்த 02.03.2023ம் தேதி மதியம் 01.00 மணிக்கு எனது வீட்டிற்கு பக்கத்தில் சண்டை நடந்தது. சண்டை நடந்த பின்பு நான் வந்தேன். அப்போது மண்டபம் காவல்நிலையத்தில்இருந்து சார்பு ஆய்வாளர் வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து என்னிடம் சண்டை நடந்தா என்று கேட்டு கையொப்பம் செய்ய சொன்னார்கள். நான் கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது ஆகும். அது அ.சா.ஆ.2 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

சம்பவம் நடந்ததாக கூறப்படும் பெங்காளி தெருவிற்கும், நான் குடியிருக்கும் சேது நகருக்கும் இடையே அரை கி.மீ தூரம் இருக்கும். எனக்கு சம்பவத்தை பற்றி நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். நான் கையெழுத்து செய்ததில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் சொல்லிதான் சாட்சியாக கையொப்பம் போட்டேன் என்றால் வீட்டுக்கு பக்கத்தில் நடந்ததால் கையொப்பம் போட்டேன். இதுசம்பந்தமாக போலீசார் என்னை தனியாக விசாரித்து வாக்குமூலம் வாங்கவில்லை என்றால் சரிதான்.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.03.19 18:22:47 +0530